**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

## EP.No.34/2024 P.W.1

(சாட்சிக்கு திரு.V.பிரதாப், உதவியாளர் அவர்களால் சாட்சி பிரமாணம் செய்யப்பட்டது)

| | |
|---|---|
| பெயர் | தங்கராஜ் |
| த/பெ. | சண்முகசுந்தரம் |
| வயது | 51 |
| வசிப்பிடம் | எண்.139, ஆர்காட் சாலை, வளசரவாக்கம், சென்னை |
| தொழில் | |

**முதல் விசாரணை** 15.07.2026

சென்னை, வளசரவாக்கம், ஆர்காட் சாலை, எண்.139-ல் வசிக்கும் தங்கராஜ் த/பெ.சண்முகசுந்தரம், வயது 51 ஆகிய நான் இந்த வழக்கில் மனுதாரர். இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

நான் நிறைவேற்றுதல் மனுவை சுதா செக்யூரிட்டி புரொடக்ஷன் பிரைவேட் லிமிடெட்டிற்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன். அதன் இயக்குநர்களை 2, 3 எதிர்மனுதாரர்களாக சேர்த்துள்ளேன். 07.04.2023 அன்று வழங்கப்பட்ட நடுவர் தீர்ப்பின் அடிப்படையில் 30.10.2023 நிலவரப்படி ரூ.32,59,933/-யை வசூலிப்பதற்காக தீர்ப்பு கடனாளியை கைது செய்ய மனு தாக்கல் செய்துள்ளேன். தீர்ப்பு கடனாளி என்னுடைய தொகையை செலுத்துவதற்கு போதிய தகுதி இருப்பதாலும், 1வது தீர்ப்பு கடனாளி நிறுவனம் இந்தியா முழுவதும் இயங்குவதாலும் அவர்களுக்கு என்னுடைய தொகையை செலுத்துவதற்கான தகுதி உள்ளதால மேற்படி தீர்ப்பு கடனாளியை கைது செய்து, உரிய தொகையை வசூலித்து தரும்படி வேண்டுகிறேன்.